பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 23 சனிக்கிழமை 09.09.2023 அதிர்வு 40

## மாற்றுத்திறனாளி வெட்டிக்கொலை!

மாற்றுத்திறனாளி ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை, சேறுபிட பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது என்று களுத்துறை – 04

## அளவெட்டி அரிசி ஆலையில் தீ!

### பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசம்



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணத்தில் அரிசி ஆலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், ஆலை இயந்திரங்கள், தளபாடங்கள் உள்ளிட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

அளவெட்டி வடக்கில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் இன்று காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. 04



## நானுஓயாவில் மாயமான குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா, கிலாரண்டன் பகுதியில் நேற்றிரவு முதல் காணாமல்போயிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிரிமிட்டிய பகுதியில் உள்ள சிறிய நீரோடையில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது. 04





# ராஜபக்ஷக்களைக் கூண்டோடு கைது செய்து சிறையிடுங்கள்!

## ரணிலிடம் சஜித் அணி வேண்டுகோள்

- சுடர் திலீபன் -

“இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களிலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களிலும் ராஜபக்ஷக்கள் தொடர்புபட்டுள்ளனர் என்று “சனல் 4” தொலைக்காட்சி வெளியிட்டுள்ள காணொலியில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, ராஜபக்ஷக்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.” 04

## மோ. சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் சாவு!



மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கண்டி, பூஜாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாரத்துகொட நகரில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. 04

## வவுனியாவில் கோர விபத்து; கான்ஸ்டபிள் ஒருவர் மரணம்!



வவுனியா நிருபர்

வவுனியாவில் இடம்பெற்ற கோர விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார் 04





### கிளிநொச்சி மாவட்டத்தில்

# பெரும்போகத்துக்கு உர விநியோகத்தை விரைவுபடுத்துவது தொடர்பில் ஆராய்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் 2023 – 2024 ஆம் ஆண்டுக்கான பெரும்போகத்துக்கு உர விநியோகத்தை விரைவுபடுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று (08) வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத் தில் மேலதிக அரச அதிபர் எஸ்.முரளித ரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் போகத்தில் 28,415 ஹெக்ரெய ரில் நெற்செய்கை மேற்கொள்ளப் படவுள் ளது. இதற்கு உரிய காலத்தில் உர விநியோகத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கலந்துரையாடப் பட்டது.

இதன்போது பெரும்போக பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள் ஆகியவற்றை உரிய காலத்தில் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக உரக் கம்பனி பிரதிநிதிகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த மாவட்ட விவசாயிகள் உரம் மற்றும் கிருமி நாசினிகளை பெற்றுக் கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள், விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள நிதி மானியம், பெரும்போக பயிர்ச் செய்கையில் எதிர்நோக்கும் பிரச்சி னைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப் பட்டது.

# கிண்ணியா மத்திய கல்லூரியின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிண்ணியா மத்திய கல்லூரியில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கிடம் பழைய மாணவர் சங்கத்தினர் கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இதற்கமைய ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின் அனுசரணையுடன் இத்திட்டத்துக்கான ஆரம்ப வேலைகள் திருகோணமலை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினரால் புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர் முஹம்மட் முளவ்பர், பழைய மாணவர் சங்ககத்தின் செயலாளர் சனான் ஆசிரியர், ஐ.எஸ்.ஆர்.சி. பிரதிநிதி லபீப் மற்றும் கல்லூரி யின் ஆசிரியர்கள் கலந்து கொண்ட னர்.







# அம்பாறையில் தொழிற்சங்க மாநாடு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தேசிய தொழில் சங்க சம்மேளன அம்பாறை மாவட்ட மாநாடு அம்பாறை நகர மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இலங்கையின் பிரபலமான தொழில் சங்க வாதியும் தேசிய தொழில் சங்க சம்மேளன தலைவருமான சகோதரர் லால்காந்த, செயலாளர் சகோதரர் சந்தன சூரியாராச்சி, திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளர் வசந்த பியதிஸ்ஸ, இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தைச் சேர்ந்த அனுர ராஜபக்ஷ, கல்முனை கல்வி மாவட்ட அமைப்பாளர் ஏ.ஆதம்பாவா உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

நாட்டின் அரச தனியார்த்துறை மற்றும் தோட்டத் தொழிலாலர்கள் உட்பட 70 லட்சம் தொழிலாளர் வர்க்கத்தின் சம்பளம் அதிகரிக்கப்பட்டு, வாழ்வாதாரம், ஈ.ரி.எவ்., ஈ.பி.எவ். போன்ற விடயங்கள் தொடர்பில் குரல் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையானின் நாடாளுமன்ற பதவியை இடை நிறுத்த வேண்டும்

## கோரிக்கை விடுக்கிறது உலமா கட்சி

**(ஏ.எல்.எம்.)**

குழுவொன்று சதித்திட்டம் செய்தால் அவர்களோடு நின்றவன் சாட்சியாக மாறினால் சட்டப்படி அவன் சாட்சியம் ஏற்கப்படும் என்ற வகையில் ஆசாத் மௌலானாவின் குற்றச் சாட்டின் பிரகாரம் (சனல் – 4) நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானை நாடாளுமன்றக் குழு அமைத்து விசாரிக்க சபாநாயகர் முன் வருவதுடன் பிள்ளையானின் நாடாளுமன்றப் பதவியை இடை நிறுத்த வேண்டும்.



இவ்வாறு ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

பிள்ளையானின் செயலாளராக இருந்த ஆசாத் மௌலானாவால் சொல்லப்பட்ட விடயங்களை யாரும் இலகுவில் தட்டிக்கழிக்க முடியாது.

அத்துடன் ஈஸ்டர் தாக்குதலுக்கு ஐ. எஸ். உரிமை கோரியுள்ளது என்ற பிள்ளையானின் கடுத்தும் நிரூபிக்கப்பட வேண்டும்.

குண்டுத் தாக்குதல் இடம் பெற்ற போது இதற்கு ஐ.எஸ். பொறுப்பேற்றதாக ஊடகங்கள் கூறின. இதற்காக ஐ. எஸ். தலைவர் பக்தாதியின் வீடியோ உரை ஒன்றை வெளியிட்டன. அதில் அவர் அரபு மொழியில் தெளிவற்ற முறையில் ஏதோ பேச ஆங்கிலத்தில் பின்னணியில் ஐ. எஸ். உரிமை கோருவதாக கூறப்பட்டது. அந்த வீடியோவில் ஐ. எஸ். தலைவர் அவ்வாறு கூறவில்லை என்பதை அரபு மொழி தெரிந்த நமக்கு புரிந்தது.

வேண்டுமென்றே ஐ. எஸ். பயங்கரவாதிகள் மீது பழி போட்டு தப்பிக் கொள்ளும் முயற்சியா என்பதும் விசாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஐ. எஸ். பின்னணி இருந்திருந்தால் இது பற்றிய அவர்களின் அரபு மொழியிலான அறிக்கையை வெளியிடும்படி பிள்ளையானை கோருவதும் சபாநாயகரின் பொறுப்பாகும்.

ஈஸ்டர் தாக்குதல்கள் என்பன தற்கொலை தாக்குதல்களா அல்லது அவை ரிமோட் கன்ட்ரோலால் இயக்கப்பட்ட தாக்குதல்களா என்றும் விசாரிக்கப்பட வேண்டும். அப்பாவிகள் மீது எதுவித காரணமும் இன்றி தாக்குதல் மேற்கொள்வது இஸ்லாம் மார்க்கத்தில் தடுக்கப்பட்ட ஒன்று என்பதை சாதாரண முஸ்லிம்களும் அறிவர்.

தீவிரவாதிகள் சிலர் 2017 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிறையில் இருந்த போது, அவர்களுடன் அறிமுகமான பிள்ளையான் அவர்கள் பற்றி ஆசாத் மௌலானாவிடம் தெரிவித்தார் என்றும் அவர்கள் சிறையிலிருந்து வந்த பின் பிள்ளையானின் அறிவுறுத்தலுக்கிணங்க அவர்களைத் தொடர்பு கொண்டு ஏனைய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்ததாக மௌலானா கூறியுள்ளார்.

இவரது கூற்றுக்களை வைத்து பார்க்கும் போது இத்தாக்குதல்களின் பிரதான மூளையாக பிள்ளையானே செயற்பட்டுள்ளமை தெரிகிறது.

பிள்ளையான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால் சபாநாயகர் குழுவொன்றை நியமித்து இது பற்றி விசாரிக்க வேண்டும். விசாரணை முடியும் வரை பிள்ளையானின் நாடாளுமன்ற பதவியை இடை நிறுத்த வேண்டும் .– என்றுள்ளது.

# 2 கடைகளில் மதுவை வாங்கிவிட்டுப் பணத்தை செலுத்தாது தப்பியோடிய பொலிஸ் பரிசோதகர்

ஓட்டோ ஒன்றில் வந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவர் இரண்டு மது பானசாலைகளுக்கு சென்று மதுபானத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டு பணத்தைச் செலுத்தாது தப்பியோடும் காட்சிகள் சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மட்டக்களப்பு நகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மதுபானசாலைக்குச் சென்று அரைப் போத்தல் மதுபானத்தை வாங்கிவிட்டுப் பணத்தைத் தருவதாகக் கூறிவிட்டு



மதுபானப் போத்தலுடன் ஓட்டோவில் அந்தப் பொலிஸ் பரிசோதகர் தப்பியோடியுள்ளார்.

இதேபோன்று மற்றுமொரு மது பானசாலைக்குச் சென்ற அந்தப் பொலிஸ் பரிசோதகர் அங்கும் அரைப் போத்தல் மதுபானத்தை வாங்கிவிட்டு பணத்தை எடுத்து வருவதாகத் தெரிவித்து மதுபானத்துடன் ஓட்டோவில் தப்பியோடியுள்ளார்.

இந்தக் காட்சிகள் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகியுள்ள நிலையில், அவை சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### மாற்றுத்திறனாளி...

தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய செவித்திறன் மற்றும் பேச்சுத் திறன் குறைபாடுள்ள நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் நேற்று மாலை மரண வீடொன்றுக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டு வெளியேறிய நிலையில், வீடு திரும்பாததால், தேடிப் பார்த்தபோது அயல் வீடொன்றுக்கு முன்பாக வெட்டுக்காயங்களுடன் தரையில் கிடந்துள்ளார்.

பின்னர் குடும்பத்தார் அவரை வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபரிடம் சந்தேகநபர் கடன் பெற்றுள்ளார் எனவும், அதனை மறுநாள் மீண்டும் கேட்ட போது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது எனவும் கொலை செய்யப்பட்டவரின் மகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொலைச் சந்தேகநபர் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

### நானுஓயாவில்...

நானுஓயா, கிலாரண்டன் கீழ் பிரிவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையே (வயது 49) இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நானுஓயா , கிரிமிட்டி நகரப் பகுதிக்குப் பொருட்கள் வாங்குவதற்குச் செல்வதாகக் கூறிவிட்டு நேற்றிரவு வீட்டிலிருந்து சென்றுள்ளார். அவர் திருப்பி வராததால் குடும்பத்தினரும், பொது மக்களும் இணைந்து தேடுதல் நடத்தினர். இந்நிலையில், இன்று காலை சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப் பட்டது.

இது தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

### அளவெட்டி...

அரிசி ஆலை தீப் பிடித்ததும், உரிமையாளர் அயலவர்கள் உதவியுடன் தீயைக் கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த போதிலும் தீ வேகமாகப் பரவியதால் இயந்திரங்கள், தளபாடங்கள் என்பன எரிந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

### வவுனியாவில்...

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ - 9 வீதி விளக்குவைத்தகுளத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்த கப் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வவுனியாவில் இருந்து புளியங்குளம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

கண்டியைச் சேர்ந்தவரும் புளியங்குளம் பொலிஸ் கான்ஸ்டபிளுமான 55 வயதுடைய கருணாதிலக என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

### மோட்டார் சைக்கிள்...

பூஜாபிட்டியவிலிருந்து வெலிகல்ல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளே விபத்துக்குள்ளாகியுள்ளது.

பூஜாபிட்டியவில் வசிக்கும் 28 வயதுடைய மகேஷ் கருணாதிலக என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர் வேலை முடிந்து வீடு திரும்பும்போது விபத்தில் சிக்கியுள்ளார்.

அவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் எதிர்முனைக்கு இழுத்துச் செல்லப்பட்டு மின்கம்பத்தில் மோதியுள்ளது.

சம்பவ இடத்திலேயே குறித்த இளைஞர் சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ராஜபக்ஷக்களை...

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

"இலங்கையை மாத்திரமல்ல ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் 'சனல் 4' வெளியிட்டுள்ள காணொலியை நிராகரிக்க முடியாது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை கட்டாயம் வேண்டும்" - என்றும் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. இதனைத் தெரிவித்துள்ளார்.

"2019இல் மக்களைக் கொன்றுவித்து ஆட்சியைப் பிடித்த ராஜபக்ஷக்கள், கடந்த வருடம் (2022) மக்களைப் பட்டினியால் சாகடித்து ஆட்சியைத் தக்க வைக்கலாம் என்று கனவு கண்டுள்ளார்கள். ஆனால், வீறுகொண்டு எழுந்த மக்கள், ராஜபக்ஷக்களைக் கூண்டோடு பதவிகளிலிருந்து விரட்டியடித்தார்கள்" - என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"சகல விதமான ஊழல் மோசடிகளிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் தொடர்புபட்டுள்ளனர். எனவே, ராஜபக்ஷக்கள் அனைவரையும் சிறைக்கு அனுப்பியே தீர வேண்டும்" - என்றும் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேலும் வலியுறுத்தியுள்ளார்.










# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்டம்

## 19ஆம் நாள் நிகழ்வுகள்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் 19 ஆம் நாள் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய குரு சிவஸ்ரீ கைலாசநாத வாமதேவ குருக்கள் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்றது.















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வெள்ளை யானையா? காமதேனுவா?

வாய்ப்புக் கிட்டும் போது அதைப் பயன்படுத்தாமல் புறமொதுக்கி, உதாசீனம் செய்துவிட்டு, பின்னர் குறை கூறுவதில் அர்த்தமில்லை.

வடக்கின் துறைமுகமான காங்கேசன்துறை குறித்து பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழு (கோப் குழு) குறை கூறுகின்றமையைப் பார்க்கும் போது அப்படித்தான் தோன்றுகின்றது.

2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு எந்தக் கப்பலும் வரவே இல்லை. அப்படி ஒரு துறைமுகத்தை பேணுவது வெள்ளை யானையைக் கட்டி தீனி போடுவதற்கு ஒப்பானது. வரவின்றி செலவு செய்யும் வீண் விரய வேலை இது என்ற தொனியில் கருத்து வெளியிட்டிருக்கின்றது கோப் குழு.

துறைமுகம் ஒன்றை பேணுவதற்கு அரசு பெருந் தொகைப் பணத்தை செலவிட வேண்டும் என்பது புரிந்து கொள்ளத்தக்கது. அந்த துறைமுகம் முறையாக பயன்படுத்தப்படாவிட்டால் - கப்பல்கள் வந்து போகாவிட்டால் - பெருந்தொகை நிதி செலவிட்டு அதை பேணுவது விரயம்தான். அத்தகைய துறைமுகம் வெள்ளை யானைதான்.

ஆனால் அத்தகைய நிலை காங்கேசன்துறை துறை முகத்திற்கு ஏன் ஏற்பட்டது என்பதையும் மேற்படி விமர்சனத்தை முன் வைக்கும் கோப் குழு போன்றவை யோசிக்க வேண்டும்.

பக்கத்தில் இருக்கும் உபகண்டமான இந்திய நாட்டுக்கும், இலங்கைக்கு இடையில் கடல் மார்க்கத்தில் மிக நெருக்கமான துறைமுகம் காங்கேசன்துறைதான்.

இந்தியாவுடனான ஊடாட்டத்தை மேம்படுத்தி னாலே காங்கேசன்துறை துறைமுகம் வெள்ளை யானை நிலையிலிருந்து பணம் கொட்டிக் கொடுக்கக்கூடிய காமதேனுவாக மாறிவிடும் என்பதுதான் உண்மை.

இந்தியாவுடன் சுற்றுலாப் போக்குவரத்து, பயணிகள் போக்குவரத்து, வர்த்தகப் பண்டங்களின் போக்குவரவு போன்றவற்றுக்கு மிக நெருக்கமானதும் - செலவு குறைந்ததும் - மிகவும் சாத்தியப்பாடானதுமான ஒரே துறைமுகம் காங்கேசன்துறைதான்.

இத்தகைய ஊடாட்டங்களுக்கு தேவையான அடிப்படை கட்டுமானங்கள் கூட காங்கேசன்துறையில் இல்லை என்பதுதான் நிலைமை.

பயனே தராத அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்றவற்றுக்குக் கொட்டிச் செலவழித்து, கடனில் கிடைத்த பணத்தையும் கரியாக்கி, முழு நாட்டையுமே பொறியில் மாட்டி வைத்த கொழும்பு ஆட்சி பீடம், பயணிகள் போக்குவரத்துக்கும், சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கும், வர்த்தகப் பண்டங்களின் பரிமாற்றத்திற்கும் உரிய வகையில் காங்கேசன்துறை துறைமுகத்தை மேம்படுத்தக் கோரினால் அதைச் செய்யாமல் இழுத்தடிக்கின்றது.

காங்கேசன்துறையும் பலாலி விமான நிலையமும் மேம்பட்டால் இலங்கை - இந்திய ஊடாட்டத்துக்கான மையமாக வடக்கு யாழ்ப்பாணம் மாறிவிடும், கொழும்பும் கட்டுநாயக்காவும் பின்னடைவுகளைக் காணும் என்று கொழும்பில் அதிகாரத்தில் இருக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதத் தலைமைகள் எண்ணுகின்றன.

அவை காங்கேசன்துறையை மேம்பட விருத்தி அடைய விடப்போவதில்லை. வெள்ளையானையாக அதைக்காட்டி செயலிழக்க வைக்கச் செய்வதுதான் கொழும்பின் உள்ளார்ந்த கபடத் திட்டம்.





## குறுங்கால கற்கைநெறி ஆரம்பம்

(ஏ.எல்.எம்., நூருல் ஹுதா உமர் )

தென்கிழக்கு பல்கலைக்கழக, கலை, கலாச்சார பீடத்தின் அரசியல் துறை, நாடாளுமன்றத்துடன் இணைந்து குறுங்காலக் கற்கை நெறி ஒன்றை நடத்தவுள்ளது.

பல்கலைக்கழக உள்வாரி இளங் கலைப் பட்டதாரி மாண வர்களுக்கென இந்தக் குறுங்காலக் கற்கை நெறி இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகியது. நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற செயற்பாடுகளும், ஒழுங்கு முறைகளும் பற்றிய இந்தக் கற்கை நெறி, இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக கலை கலாச்சார பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளளது.

இதில் பல்கலைக்கழக உள்வாரி இளங் கலைப் பட்டதாரி மாணவர்கள் 250 பேர் பங்கு கொள்ளவுள்ளனர் என்று பல்கலைக்கழக கலை, கலாச்சார பீட அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் கலாநிதி. எம்.அப்துல் ஜப்பார் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் விஞ்ஞானத் துறை தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பாரின் நெறிப்படுத்திலில் நடைபெற்ற இந்த அங்குரார்ப் பண நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற மக்கள் தொடர்பு அதிகாரி ஜெஸ்ரி முஹம்மட் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் விளக்க மாளித்தார். நாடாளுமன்ற நிர்வாகப் பணிப்பாளர் ஜி. தட்சனாராணி நாடாளுமன்றம் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் விளக்கமளித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் நாடாளுமன்ற நடைமுறை மற்றும் நாடாளுமன்றத்தின் அலுவல் ஒழுங்கு தொடர்பிலும், பிரதிநிதித்துவத்தில் நாடா ளுமன்றத்தின் முக்கியத்துவம் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

## மருதமுனை ஷம்ஸ் மத்தியில் 4 மாணவர்கள் மருத்துவத்துக்கு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

தற்போது வெளியாகியுள்ள உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் படி, மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூ ரியிலிருந்து நான்கு மாணவர்கள் மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 58 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு வெவ்வேறு கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்படுவர் என்று பாடசாலையின் அதிபர் எம். எம்.ஹிர்பகான் தெரிவித்துள்ளார்.

முஹம்மட் மிஹ்லார் மரீன் அஹமட் (3ஏ), முகம்மட் ரஹீம் அப்னான் அர்ஹம் (3ஏ), அஜ்மல்கான் அப்ரின் சின்ஹான் (2ஏபி), நியாஸ்டீன் பாத்திமா சிறீன் (2ஏபி) ஆகிய நான்கு மாணவர்கள் மருத்துவத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை விஞ்ஞான பிரிவிலிருந்து 27 மாணவர்களும், தொழில்நுட்ப பிரிவில் இருந்து 17 மாணவர்களும் என 58 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘மணி மாஸ்டர்’ விருதுக்கான திருக்குறள் பரிசளிப்பு விழா

(மன்னார் நிருபர்)

‘மணி மாஸ்டர்’ விருதுக்கான திருக்குறள் போட்டியின் பரிசளிப்பு விழா வியாழக்கிழமை (07) மன்னார் நகர சபை கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

மணி மாஸ்டரின் புதல்வரும் பொறியிய லாளருமான விமலேஸ்வரன் தலைமையில் குறித்த பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

சிறுவர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் தமிழ் மொழியை வளர்க்கும் வகையிலும் அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையிலும் 4 பிரிவுகளில் போட்டி இடம்பெற்றது.

முதல் இடத்தைத் பெற்ற 3 போட்டியா ளர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் , 2 ஆம் இடத்தை பெற்ற 3 போட்டியாளர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாவும் , 3 ஆம் இடத்தை பெற்ற 3 போட்டியாளர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. அத்துடன் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

ஏனைய போட்டியாளர்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் பணப்பரிசில் வழங்கப் பட்டது.

தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களின் பணப்பரிசில்களில் 7 ஆயிரத்து 500 ரூபா வங்கியில் வைப்பில் இடப்பட்டு வங்கிப் புத்தகம் கையளிக்கப் பட்டது.

மணி மாஸ்டரின் ஓய்வூதிய பணத்தில் இருந்து சுமார் 5 லட்சம் ரூபாவும், அவரின் 4 புதல்வர்களது உதவியாக 5 லட்சம் ரூபாவையும் சேர்த்துப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசளிப்பு விழாவும் நடத்தப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி ஜீ.டி.தேவராஜா, மடு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி ஏ.கே.வொலன்ரைன், மன்னார் உதவி வலயக்கல்வி பணிப்பாளர் கே.மனோரஞ்சன், மடு உதவி வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.ஏ.கலவண்ணன் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.











# வரலாற்று நூல் வெளியீடு

(ஏ.எல்.எம்.)

கலைஞன் க.குலேந்திரனின் “மறைக்கப்பட்டதும் மறக்கப்பட்டதும் – வரலாற்றுக்குள்ளிவர்கள்” என்னும் வரலாற்றுநோக்கு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கலைமாமணி கா.சந்திரலிங்கம் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை அருட் கவியரசு விஸ்வப்பிரம்ம வை.ஈ.எஸ். காந்தன் குருக்கள் வழங்கினார்.

கல்முனை வடக்கு கலாசார பேரவையால் வெளியிடப்பட்ட இந்த நிகழ்வில் முதல் பிரதியை பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் வெளியிட்டு வைக்கக் கலாபூசணம் கா.சந்திரலிங்கம் பெற்றுக்கொண்டார்.

நூல் அறிமுக உரையை ஓய்வு நிலை அதிபர் வீ.பிரபாகரன் நிகழ்த்தியதுடன் நூல் வெளியீட்டு உரையை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதிப்பதிவாளர் சஞ்சீவி சிவகுமார் நிகழ்த்த நூல் பற்றிய சிறப்புரையை ஓய்வுநிலை ஆசிரிய நிலைய முகா மையாளர் கி.செல்வராசா நிகழ்த்தி னார்.





# கல்லூரி நட்சத்திரங்கள்

(பௌசுல் றிபாஸ்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடத்தும் கல்லூரி நட்சத்திரங்கள் எனும் இசை நிகழ்ச்சி கொழும்பு கொட்டாஞ்சேனை கலைமகள் வித்தியாலயத்தில் வியாழக்கிழமை (07) கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பாக பாடல்களை பாடிய மாணவிகளுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பரிசில்கள் வழங்கினார்.

பாடசாலையின் அதிபர் முருகானந்தன், பிரதி அதிபர் திருமதி ஆர். லலிதா, புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா, நிகழ்ச்சி தயாரிப்பாளர் நிஷாந்தி ரணதுங்க, நிகழ்ச்சி தொகுப்பாளர் நாகபூஷணி கருப்பையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# உயர்தரத்தில் சித்தி பெற்றோரை கௌரவித்த விளையாட்டுக் கழகம்

(பௌசுல் றிபாஸ்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று 'ஏ' சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தகுதிபெற்ற மாணவர்கள் அவர்களது விளையாட்டுக் கழகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வெளியான க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் பாலமுனை பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரைஸ்டார் விளையாட்டுக் கழக உறுப்பினர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.அவர்களது வீட்டுக்கு கழகத்தின் தலைவர் தலைமையில் அங்கத்தவர்கள் சென்று பாராட்டியுள்ளனர்.

ரைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், ஆசிரியருமான ஐ.எல். எம்.பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இக்கௌரவிப்பு விழாவில் கழகத்தின் உபதலைவர்கள், செயலாளர், பொருளாளர், உட்பட கழக நிர்வாக உறுப்பினர்களும் ஆலோசகர்களும் கலந்து கொண்டனர்.





# திருகோணமலையில் மான்களின் உணவுக்கு விற்பனை நிலையம்

(ஹஸ்பர் )

திருகோணமலையில் மான்களுக்கான இயற்கை உணவை வழங்கும் நோக்குடனும், சுற்றுலா துறையை ஊக்குவிப்பதற்காகவும், மான்களுக்கான மருத்துவ செலவு, மான் பூங்கா அழகுபடுத்தும் நோக்குடனும் மான்களுக்கான உணவு விற்பனை நிலையம் திருகோணமலை மான் பூங்காவில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைய கிழக்கு மாகாண சுற்றுலா துறை தவிசாளர் ஏ.பி.மதனவாசனின் வேண்டுகோளுக்கு இணங்க திருகோணமலை நகர சபைச் செயலாளர் வி.ராஜசேகர் இந்த விற்பனை நிலையத் தைத் திறந்து வைத்துள்ளார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் கிழக்கு மாகாண சுற்றுலா துறை தவிசாளர் ஏ.பி.மதனவாசன், திருகோணமலை நகர சபைச் செயலாளர் வி.ராஜ சேகர், Trinco Aid இன் பணிப்பாளர் திருமதி. தயாளினி ஹரிகரன் , திட்ட ஆலோசகர் அனுஜன், நிகழ்ச்சி முகாமையாளர் ச.நவநீதன், லயன் எம்.எம்.ஜெயதீன், லயன்.எஸ்.கோபிநாத், லயன். பிலோட் பார்தலட் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



# கலைஞர்கள் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அம்பாறை மாவட்ட செயலகத்தோடு இணைந்து கல்முனை பிரதேச செயலகத்தால் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தென் கிழக்கு கலை கலாசார அமையத்தால் தயாரிக்கப்பட பெரு நாள் பரிசு, மர்மவேட்டை, சைலண்ட் கில்லர் ஆகிய திரைப்படங்களில் நடித்த கலைஞர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பிரதேச செயலகத்தில் வைத்துப் பிரதேச செயலாளர் ஏ.லியாகத் அலி அண்மையில் சன்றிதழ்கள வழங்கிக் கௌரவித்தார்.



# செயற்றிறன் ஊக்குவிப்பு கற்பித்தல் செயற்பாடு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்றப் வித்தியாலயத்தில் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் வகையில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களால் விஞ்ஞான ரீதியான செயன்முறை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எம்.எம்.சம்சுதீன் அவர்களின்ஆலோசனையின் பேரில் விஞ்ஞான ஆசிரியர்களான முஹம்மட் நவாஹிர், எம்.நபார் ஆகியோரால் இந்தச் செய்முறை செயற்பாடுகள் நடத்தப்பட்டன.



# திரிய பியச வீட்டுத் திட்டம் முள்ளிப்பொத்தானையில்

**(ஹஸ்பர் )**

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் முள்ளிப் பொத்தானை சாலியபுர கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிக்குத் திரிய பியச வீட்டுத் திட்டத்துக்கான அனுமதி கடிதங்கள் கடந்த வியாழக்கிழமை (07) வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய குறித்த வீடமைப்புக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

மகளிர் சிறுவர் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் தேசிய முதியோர் செயலகம் ஊடாக திரிய பியச வீடமைப்பு திட்டம் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீடமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக 6லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறு மதியில் இவ் வீடானது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கு நிர்மாணித்து கொடுக்கப் படவுள்ளது.

குறித்த நிகழ்வில் மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் இர்பான் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலக முதியோர் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# மன்னார் மாவட்டத்தில் பயறு அறுவடை வெற்றி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விவசாய செய்கை மூலம் சிறந்த தொரு பொருளாதார கொள்கையை ஏற்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் விவசாய அமைச்சாலும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலமும், விவசாயிகளின் சொந்த பணத்திலும் பயறு விதைகள் நடுகைக்காக வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 1600 ஹெக்ரெயரில் கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள நெல் வயல்களில் மாற்றுப் பயிராக பயறு சிறு போகத்தில் விவசாயிகளால் பயிரிடப்பட்டிருந்தது.

பயறு செய்கையின் அறுவடை அண்மையில் வட்டுப்பித்தான் மடு பிரதேசத்தில் இடம்பெற்றது. கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான கௌரவ காதர் மஸ்தான் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

இந்த அறுவடை மூலம் மன்னார் மாவட்டத்தில் 900 மெற்றிக் தொன் பயறு விற்பனைக்கு தயாராக உள்ளது என்று மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் ஸஹீலா பாணு தெரிவித்தார்.



# கற்றல் சூழலை ஏற்படுத்தும் செயற்றிட்டம் முன்னெடுப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலைகளில் முறையான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறும் இடங்களில் வகுப்பறை முக்கியமானவை. அந்த வகையில் வகுப்பறையில் கற்றல் நிகழக் கூடிய சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது கற்பிக்கும் ஆசிரியரின் முக்கிய பணியாகும். அதற்கு பொருத்தமான வகுப்பறையை முகாமை செய்தல் ஆசிரியரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்குப் புதிதாக அதிபராக நியமனம் பெற்ற ஏ.பி.நஸ்மியா சனூஸின் ஆலோசனைக்கு அமைய இத் திட்டம் சகல வகுப்புகளிலும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

மாணவிகளின் கற்றல் செயற்பாடுகளை அதிகரித்து கொள்ளும் நோக்கில் தரம் 09 பிரிவின் பகுதித் தலைவி எஸ்.எம். ஜமான் (முபினா) மற்றும் வகுப்பாசிரியர்களின் ஏற்பாட்டில் அண்மையில் வகுப்பறையில் கற்றல் நிகழக் கூடிய சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான செயற்திட்டம் இடம்பெற்றது.

தரம் 09 ஆம் ஆண்டு மாணவிகளால் வகுப்பறையில் செய்யப்பட்ட ஓவியங்கள் பாடத்தோடு தொடர்பான விவரங்கள் உள்ளடக்கிய அட்டைகள், வகுப்பறையுடன் தொடர்பான நேர அட்டவணை, கழிப்பொருள்களை கொண்டு செய்யப்பட்ட ஆக்கங்கள் அதேபோன்று வகுப்பறை அழகு சுத்தம் மற்றும் இதர விடயங்கள் மாணவிகளால் மிக சிறப்பாக செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ், பிரதி அதிபர்களான ஹாஜியானி, எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, உதவி அதிபர்களான ஏ. எச். நதீரா, என்.டி. நதீகா ஆகியோர் கலந்து கொண்டனர்.





# திருக்கோவிலில் புதிய இடத்தில் மின் பாவனையாளர் நிலையம்

(பௌசுல் றிபாஸ் )

திருக்கோவில் பிரதான வீதியில் தற்காலிகமாக இயங்கி வந்த மின் பாவனையாளர் சேவை நிலையம் புதிய கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வெள்ளிக்கிழமை (08) திறந்து வைக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தை, திருக்கோவில் பிரதே செயலாளர் தங்கையா கஜேந்திரன், கிழக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் டப்யூ.எல்.எஸ். கே.விஜயதுங்க ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் அம்பாறை பிரதான தலைமை பொறியலாளர் எம்.ஆர். எம்.பர்ஹான், திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுபதிகாரி ஏ.டீ.பீ. பத்மகுமார, திருக்கோவில் பிரதேச செயலக உதவிச் செயலாளர் மற்றும் மின்சார சபை பொறியலாளர்களான யூ.மயூரன், எம்.எல்.ஹரீஸ் மொகமட் உதவிப் பொறியலாளர் எம்.ஐ.எம். நவ்பல், திருக்கோவில் மின்சார சபை அத்தியட்சகர் ஏ.அசோகதீபன், அத்தியட்சகர் சுலக்ஷன், சட்டத்தரணி ஜேகசுதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கல்முனை லயன்ஸ் இலவசக் கருத்தரங்கு

(ஏ.எல்.எம்.)

தொழில் முனைவோர் மற்றும் உயர் கல்விக்காகக் காத்திருப்போருக்கான இலவச கருத்தரங்கு ஒன்றை கல்முனை நகர லயன்ஸ் கழகம் நடத்தவுள்ளது.

"நாளைய தொடுவானத்துக்கு வழி செலுத்துதல்" எனும் தலைப்பிலான இந்த இலவச கருத்தரங்கு நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, காரைதீவு கலாச்சார மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

கல்முனை நகர லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எம்.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில், சாதனையாளர்களான கராத்தே வெற்றிவீரர் பாலுராஜ், இளம் கண்டுபிடிப்பாளர் வினோஜ்குமார், சாதனைபடைத்த நீச்சல் வீரரும், ஜனாதிபதி விருது பெற்ற சாரணருமான மதுஷன், வளர்ந்து வரும் தொழில் முயற்சியாண்மையாளரும், விருது பெற்ற வருமான திருமதி ஜேசுமணி சிவஜோதி ஆகியோர் தாம் கடந்து வந்த பாதை, மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வர்.

கருத்தரங்கில் பிரதான வளவாளர்களாக ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதில் நூலகர் கலாநிதி துரையப்பா பிரதீபன் "வெற்றி கரமான நபர்களுக்கான வெற்றிச்சூத்திரம்' என்னும் தலைப்பிலும் பல்கலைக்கழகப் பதிவாளர் ஹிப்பதுல் கரீம் 'தற்கால உலகத்துக்கான தலைமைத்துவ உத்திகள்' என்னும் தலைப்பிலும் திறந்த பல்கலைக்கழக முன்னாள் உதவிப் பணிப்பாளர் திருமதி சரண்யாலவப்பிரதன் 'இளைஞர்கள் மற்றம் தொழில் முனை வோருக்கான் வாய்ப்புக்களைத் திறத்தல்' என்னும் தலைப்பிலும் கனவு மெய்ப்படுகிறது அமைப்பின் தலைவரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான திருமதி நளினி றெட்ண ராஜா 'ஊக்கத்தைக் கட்டவிழ்த்து விடுதல் மற்றும் நேர் மறை சிந்தனைகளை வளர்த்தல்' என்னும் தலைப்பிலும் கருத்துரைகள் வழங்குவர்.

# ஜி 20 அமைப்பின் 18 ஆவது உச்சி மாநாடு டில்லியில் கோலாகலமாக ஆரம்பமானது



ஜி-20 அமைப்பின் 18 ஆவது உச்சி மாநாடு டில்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்று கோலாகலமாக ஆரம்பமானது.

மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள உலகத் தலைவர்களை பாரத் மண்டபத்தில் உள்ள சர்வதேச கண்காட்சி மண்டபத்தில் வைத்து பிரதமர் மோடி வரவேற்றார்.

மாநாட்டுக்கு அழைக்கப்பட்ட அனைத்துத் தலைவர்களும் மாநாட்டுப் பகுதிக்கு வந்தடைந்தனர். கடைசியாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை பிரதமர் மோடி வரவேற்றுச் சென்றார்.

காலம், முன்னேற்றம், தொடர்ச்சி ஆகியவைகளைக் குறிக்கும் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோனார்க் சின்னத்தின் பிரதி முன்பாக நின்று பிரதமர் உலகத் தலைவர்களை வரவேற்றார்.

ஜி-20 அமைப்புக்கு இந்தியா தலைமை தாங்கியுள்ள நிலையில், அந்த அமைப்பின் 18 ஆவது உச்சிமாநாடு டில்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்றும், நாளையும் நடைபெறுகிறது.

இந்தியாவில் ஜி 20 உச்சி மாநாடு நடைபெறுவது இதுவே முதல் முறை யாகும்.

இம்மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா உட்பட 30 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள், ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள், 14 சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

மாநாட்டின் முதல் அமர்வு காலை 10.30 மணிக்கு இந்த ஆண்டு தலைப்பான 'ஒரு பூமி' என்ற தலைப்பில் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மதிய உணவு நடைபெறுகிறது.

அதன் பின்னர் இரண்டாவது அமர்வு 'ஒரு குடும்பம்' என்ற தலைப்பில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமானது. மாலை 4.45 முதல் 5.30 மணி வரை 45 நிமிடங்கள் பிரதமர் மோடி மற்றும் பிற நாட்டுத் தலைவர்களுடனான தனிப்பட்ட சந்திப்புக்களுக்கு ஒதுக்கப்பட்டது.

அதன் பின்னர் தலைவர்கள் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்பாடு செய்திருக்கும் ஜி 20 விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

# ஜி 20 கூட்டமைப்பில் உறுப்பு நாடாக ஆபிரிக்க யூனியன் இணைக்கப்பட்டது

ஜி-20 நாடுகள் கூட்டமைப்பில் ஆபிரிக்க யூனியனை நிரந்த உறுப்பு நாடாக இணைக்கும் நடைமுறை நிறைவேறியது. இதற்கான தீர்மானத்தை பிரதமர் நரேந்திர மோடி மாநாட்டில் முன்மொழிய பின்னர் அது நிறைவேற்றப்பட்டது என அறிவிக்கப்பட்டது.

ஜி-20 உச்சி மாநாடு டில்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்றும், நாளையும் நடைபெறுகிறது.

மாநாட்டுக்கு வந்த உலகத் தலைவர்களைப் பிரதமர் மோடி வரவேற்று அரங்குக்கு அழைத்துச் சென்றார்.




தொடர்ந்து மாநாட்டில், ஜி-20 நாடுகள் கூட்டமைப்பின் நிரந்த உறுப்பு நாடாக ஆபிரிக்க யூனியனை இணைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. ஆபிரிக்க யூனியனில் 55 நாடுகள் உள்ளன. இந்த நிலையில் ஆபிரிக்க யூனியனை இணைத்ததால் ஐரோப்பிய யூனியனுக்கு அடுத்தபடியாக ஜி-20 கூட்டமைப்பு மிகப் பெரிய அமைப்பாக உருவாகியுள்ளது.

முன்னதாக ஜி-20 மாநாட்டுக்கு வருகைதந்த ஆபிரிக்க யூனியனின் பிரதிநிதியை பிரதமர் நரேந்திர மோடி ஆரத் தழுவி பாரத் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்.

மாநாடு தொடங்கியவுடன் மொராக்கோ நாட்டில் ஏற்பட்ட சக்திவாய்ந்த பூகம்பத்தில் சிக்கி உயிரிழந்தோருக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்தார். மாநாட்டில் பிரதமர் மோடியின் இருக்கை முன்னர் பாரத் என்று பெயர்ப் பலகை இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மொராக்கோவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: 600 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழப்பு!



வடக்கு ஆபிரிக்க நாடான மொரோக்காவில் நேற்று இரவு ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 600 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

நிலநடுக்கத்தின் தாக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆகப் பதிவாகி யுள்ளது. இதனை அந்த நாட்டு அரசுத் தரப்பும் உறுதி செய்துள்ளது.

மொராக்கோவின் சுற்றுலாதலமான மாரகேஷ் பகுதியில் இருந்து 72 கிலோமீட்டர் தொலைவில் தென்மேற்கில் உள்ள இடத்தில் பூமிக்கு அடியில் 18.5 கிலோமீற்றர் ஆழத்தில் பூகம்பம் மையம் கொண்டிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் கணித்துள்ளது. மேலும் பூகம்பம் சரியாக வெள்ளி இரவு 11.11 மணிக்கு நடந்துள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு மாரகேஷை சேர்ந்த ஒருவர் கருத்து தெரிவிக்கையில், திடீரென கட்டிடம் பயங்கரமாகக் குலுங்கியது. நான் பூகம்பம் ஏற்பட்டுள்ளதை புரிந்து கொண்டேன். வெளியில் உள்ள கட்டிடங்கள் பயங்கரமாக குலுங்கின. அதிர்ச்சியில் நான் இருந்த கட்டிடத்திலிருந்து வெளியில் ஓடிவந்தேன். நிறைய பேர் என்னைப் போல் ஓடிவந்து வீதியில் தஞ்சம் புகுந்தனர்.

10 நிமிடங்கள் மின்சாரம் துண்டிக் கப்பட்டது. தொலைபேசிகள் ஏதும் வேலை செய்யவில்லை. பின்னர் தொலைபேசி பயன்பாட்டுக்கு வந்தது. இருந்தாலும் நாங்கள் அனைவருமே வீதியிலேயே இருப்பது என முடிவு செய்தோம் என்று தெரிவித்தார்.

மாரகேஷில்உள்ளமருத்துவமனைகள் காயமடைந்த மக்களால் நிரம்பி வழிகின்றன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 300 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 50 இற்கும் மேற்பட்டோர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை மேலும் அதிக ரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்தார் ரஸ்டெம்



உக்ரைனின் புதிய பாதுகாப்பு அமைச்சராக ரஸ்டெம் உமெரோவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சரான ஒலெக்சி ரெஸ்னிகோவை மாற்றுவதற்கு ஜனாதிபதி ஜெலென்ஸ்கி முன்மொழிந்ததைத் தொடர்ந்து, ரஸ்டெம் உமெரோவை நியமிக்க உக்ரைன் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிலையில், ஜனாதிபதி ஜெலென்ஸ்கி அவரை புதிய பாதுகாப்பு அமைச்சராக அறிவித்து பதவி பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

புதிய பாதுகாப்பு அமைச்சர் நியமனம் குறித்து ஜெலென்ஸ்கி வெளியிட்டுள்ள பதிவில், இன்று உக்ரைனின் புதிய பாதுகாப்பு அமைச்சர் ரஸ்டெம் உமெ ரோவை அறிமுகப்படுத்தினேன்.

அவரது முன்னுரிமைப் பணிகள் முழு பாதுகாப்புத் துறைக்கான அமைச்சகத்தின் மூலோபாய மற்றும் ஒருங்கிணைப்பு செயல்பாடுகளை வலுப்படுத்துவது, தனிப்பட்ட வீரர்களுக்கு முன்னுரிமை அளிப்பதும் ஆகும்.

அத்துடன், சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் உக்ரைன் அதன் நேட்டோ அணுகலை நிறைவு செய்வதை உறுதி செய்தல் மற்றும் நமது பாதுகாப்புப் படைகள் அனைத்திற்கும் குறிப்பிட்ட பிரிவுகளின் வெற்றிகளை அளவிடுவதும் ஆகும்.

ஆனால் மிக முக்கியமாக வெளிப் படைத்தன்மை மற்றும் நம்பிக்கை, இந்தப் போரில் நம்பிக்கையே எங்களின் முக்கிய ஆயுதம் ஆகும். ரஸ்டெம் உமெரோவ் அந்தப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றும் திறன் கொண்டவர் என்று நான் நம்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

# கனடாவில் காட்டுத்தீ நீடிக்கும்!

கனடாவில் காட்டுத்தீ காரண மாக ஒரு லட்சத்து 65 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பு தீக்கிரையாகி யுள்ளது. இந்த நிலையில். செப்டம்பர் மாதத்திலும் காட்டுத்தீ பரவுகை தொடர்ந்தும் நீடிக்கும் என கனடிய இயற்கை வள முகவர் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கனடாவில் சுமார் 6174 இடங்களில் காட்டுத்தீ பரவியது எனவும் இதில் தற்பொழுது ஆயிரத்திற்கு மேற்பட்ட இடங்களில் காட்டுத்தீ பரவுகை காணப் படுகின்றது என்றும் தெரிவிக்கப்படு கிறது.

இவ்வாறு நிலவி வரும் காட்டுத்தீ பரவுகைகளில் சுமார் 800 இடங்கள் காட்டுப் பகுதிக்குள் அடங்காதவை என தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத்தீ காரணமாக லட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர நேரிட் டுள்ளனர். பெரும் எண்ணிக்கை யிலான சொத்துக் களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என கூறப்படுகிறது.

மேலும் பல இடங்களில் காட்டுத்தீ பரவுகை ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# பாடசாலை நூழைவாயில் திறப்பு

(பௌசுல் றிபாஸ்)

பொத்துவில் அல் அக்ஸா வித்தியாலத்தில் தரம் பத்து வலய மட்ட நாடாளுமன்ற மாணவர் நலன்புரி, மாணவ நன்னடத்தை அபிவிருத்தி அமைச்சர் ஏ.ஏ.முகம்மட் இல்ஹாமின் கோரிக்கைக்கு அமைய அவரது தந்தை ஏ.ஏ.அஸீஸின் நிதிப் பங்களிப்புடன் பாடசாலை நூழைவாயில் திறந்து வைக்கப்பட்டது.

“துயர் துடைப்போம்” அமைப்பின் தலைவர் மன்சூர் ஆதமின் நெறிப்படுத்தலின் கீழ் பாடசாலை அதிபர் என். கே.அப்துல் கரீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பளர் ஏ.எல். றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்த நூழைவாயில் திறப்பதற்குப் பிரதான காரணியாக இருந்த இல் ஹாமுக்கு விருந்தினர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டது.




# 35 லட்சம் ரூபா செலவில் பதுரியா மத்தியில் அபிவிருத்தி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாவனெல்ல பதுரியா மத்திய கல்லூரிக்கு அவசிய தேவையாக இருந்த அபிவிருத்தி திட்டங்கள் சில பூர்த்தி செய்யப்பட்டு, பதுரியா மத்திய கல்லூரி அதிபர் ஏ.எல் .ஏ .ரஹ்மானிடம் பழைய மாணவியர் சங்கத்தால் அண்மையில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பழைய மாணவியர் சங்கத்தின் செயலாளர் டாக்டர் எம்.ஜே.எப்.யமீனாவுடன் ஒன்றிணைந்து செயல்படும் நிர்வாக குழுவினர் இவ் வேலைத்திட்டத்தை பொறுப்பெடுத்து குறுகிய காலத்தில் மிகவும் சிறப்பாக செய்து முடித்திருந்தனர்.

இவற்றுள் பாடசாலையின் பிரதான நுழைவாயில், புனரமைப்பு செய்யப்பட்ட வாசிகசாலை, மாணவ தலைவர்களுக்கான 50 மேலங்கிகள், கேட்போர் கூடத்துக்கான உபகரணங்கள், புதிய கட்டடத்துக்கான மலசலகூட நிர்மாணம் போன்ற வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக விவசாய பொறியியல் பீட விரிவுரையாளர் கலாநிதி எம். ஐ.எம் .மௌஜுத் ,தேசிய நூலக பயிற்றுவிப்பாளர் எம். என். எம். சிஹாம், பாடசாலை கட்டட நிர்மாண சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவ சங்க உறுப்பினர்கள், பழைய மாணவியர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.